# மணப்பாறை நகராட்சி

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25.10.2023-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 25.10.2023 | **30.08.2023-ம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட கூட்ட பொருள்**<br>**பொருள் – 1**<br>இந்நகராட்சியில் செயலற்ற கணக்குகள் மற்றும் வட்டிநிதித்திட்டம் 2023-2024ஆம் ஆண்டு நிதி திட்டத்தின் கீழ் தார்சாலை மற்றும் சிமெண்ட்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.331.00 இலட்சம் மதிப்பீட்டு தொகையில் 12.07.2023-ஆம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் திரு.ஆர்.எ.குழந்தைவேல் என்பவர் திரு.வி.ஆனந்தன் ஒப்பந்ததாரர் வலசுப்பட்டி மருங்காபுரி அவர்களின் ஆவணத்தை தவறாக பயன்படுத்தியுள்ளதாக தெரிவித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No.17306/2023 தொடுத்துள்ளார். மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.R.பாஸ்கரன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்,மதுரை ஆஜரானதில் வழக்கிற்கான கட்டண தொகை ரூ.40,000/-ஐ வழக்கின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும், செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(**ந.க.எண்**:1775/2023/**இ**1) | **தீர்மான எண்.382**<br>**ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.**<br>**திரு.ம.செல்வா, 16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபணை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| 25.10.2023 | **பொருள் – 2**<br>மணப்பாறை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 2022-2023-ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான மாட்டு சந்தையில் நகர அளவை எண்-547/1Bல் வள மீட்பு மையம் (MRF 4 TPD) அமைக்கும் பணி ரூ.43.00 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது தற்போது மேற்கண்ட வள மீட்பு மையத்தில் இயந்திரங்கள் விநியோகம் செய்தல் மற்றும் மின்சார வசதி ஏற்பாடுகள் செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.383**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 25.10.2023 | **பொருள் – 3**<br>மணப்பாறை நகராட்சியில் 15-வது நிதிக்குழு மான்யம் 2022-23-ன் கீழ் புதிதாக நகர்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் அமைக்கும் பணி ரூ.25.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட மதிப்பீட்டில் நச்சுத்தொட்டி அமைக்க வகைபாடு செய்யப்படவில்லை. தற்போது மேற்கண்ட நகர்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையத்தில் கழிவுநீர் தொட்டி கட்டுதல் மற்றும் தண்ணீர் வசதி ஏற்பாடுகள் செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே நச்சுத்தொட்டி அமைக்க மதிப்பீட்டு தொகை ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.384**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 25.10.2023 | **பொருள் – 4**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.5ல் உள்ள பொதுமக்கள் குடிநீர் சீராக வரவில்லை என கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியில் நேரடியாக ஆய்வு செய்ததில் பகிர்மான குழாய் பழுதடைந்தநிலையில் உள்ளது. எனவே அப்பகுதி மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டை முழுமையாக நிவர்த்தி செய்திட திருச்சி சாலையின் GKM மருத்துவமனை முதல் அத்திக்குளம் வரை புதிதாக பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ5.65 இலட்சம் | **தீர்மான எண்.385**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| 25.10.2023 | **பொருள்** – 5<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 மஞ்சம்பட்டி மற்றும் வார்டு எண்.,27 மணப்பாறைப்பட்டியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் சீராக வரவில்லை என கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியில் நேரடியாக ஆய்வு செய்ததில் பகிர்மான குழாய் பழுதடைந்தநிலையில் உள்ளது. எனவே அப்பகுதி மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டை முழுமையாக நிவர்த்தி செய்திட வார்டு எண்.10 மஞ்சம்பட்டி மற்றும் வார்டு எண்.,27 மணப்பாறைப்பட்டியில் புதிதாக பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.9.85 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.386**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 25.10.2023 | **பொருள்** – 6<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண்.23 பூமாலைப்பட்டியில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம் கட்டி பல வருடங்களாக அப்பகுதி மக்கள் பயன்படுத்தபடாமல் உள்ளது. ஏன் என்றால் அனைத்து வீடுகளிலும் கழிப்பிட வசதி உள்ளது. மேலும் சிறிய குழந்தைகள் செல்லும் அங்கன்வாடி மையம் இல்லாமல் தனியருக்கு சொந்தமான கட்டிடத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் தனியர் அவர்கள் அதனை காலி செய்ய கூறி வருவதாலும், வேறு கட்டடம் ஏதும் இல்லாததாலும் மேற்கண்ட பொது கழிப்பிட கட்டிடத்தினை அங்கன்வாடி மையமாக மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்**:2110/2023/**இ**1 | **தீர்மான எண்.387**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 25.10.2023 | **பொருள்** – 7<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண்.2,9,13,16,18,19 ஆகிய வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு தண்ணீர் வசதி இல்லை. எனவே அப்பகுதி மக்களின் தண்ணீர் தட்டுப்பாட்டை முழுமையாக நிவர்த்தி செய்திட மேற்கண்ட வார்டுகளில் குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.388**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 25.10.2023 | **பொருள் – 8**<br>இந்நகராட்சி பொதுப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் அலுவலக பயன்பாட்டிற்கு உள்ள அச்சுப்பொறி இயந்திரம் Kyocera Ecosys M2040 NH 29.11.2021-ல் இருந்து இயங்கிவரும் சூழ்நிலையில் அதிகமான பதிவுகள் எடுப்பதினாலும் ஆண்டு பராமரிப்பு பணி செய்யவும் அவ்வப்போது ஏற்படும் பழுதினை நீக்க Call basis அடிப்படையில் பழுது நிவர்த்தி செய்து கொள்வதற்காக உத்தேச செலவினமாக ரூ.1.00 இலட்சத்திற்கும் அதற்கான செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.389**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 25.10.2023 | **பொருள் – 9**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 மஞ்சம்பட்டியில் இன்னாசியார் தெருவில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நிலையில் உள்ளது. எனவே அப்பகுதி மக்களின் நலன் கருதியும் மஞ்சம்பட்டி இன்னாசியார் தெருவில் புதிதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.390**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 25.10.2023 | **பொருள் – 10**<br>இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-23-ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 சாணான் மடை குளம் மேம்படுத்தும் பணி ரூ.56.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது. இத்திட்டத்தில் குளக்கரைகள் பலப்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ஏதும் இடம்பெறவில்லை. மேலும் தற்பொழுது மழை காலமாக உள்ளதால் குளத்தின் கரை உடைப்பு மற்றும் சரிவு ஏற்படுவதாலும் மழைநீர் சேமிப்பு வசதி செய்வதற்கும் நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்கும் குளத்தின் கரையை பலப்படுத்தும் பணி அவசியமாக உள்ளது. எனவே மேற்படி பணிக்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.391**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. ஆட்சேபனை தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது**<br>1. திருமதி. சொ. செல்லம்மாள், 1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>2. திருமதி. வி.அழகுசித்ரா, 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>3. திரு. அ எட்வின் அபிலாஷ், 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>4. திருமதி.சு.சர்மிளா, 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>5. திரு.அ.சவரிமுத்து, 10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>6. திரு.லெ.எத்திராஜ், 12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>7. திருமதி.த.வாணி, 13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>8. திருமதி.பா.சுதா, 18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>9. திருமதி.ரா.தீபா, 22-வது |

| | | |
|---|---|---|
| | | வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>10. திரு.பொ.கௌசிக், 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>11. திரு.ச.இராமன், 27-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 25.10.2023 | **பொருள் – 11**<br>மணப்பாறை நகராட்சி 20.85 சதுர கி.மீ பரப்பளவும், 44895 மக்கள் தொகையும், 11969 வீடுகளும், 3173 வணிக நிறுவனங்களும் உள்ள நகராட்சியாகும். இந்நகராட்சியில் கட்டிட கழிவுகள், மரக்கழிவுகள், புதர்களை சுத்தம் செய்யும் கழிவுகள், பெரிய மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்யும் கழிவுகள் போன்ற கழிவுகளை சுத்தம் செய்ய வாகனம் இல்லை. மேலும் நகரிலுள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து பிரித்து வாங்கப்படும் மக்காத மற்றும் எதற்கும் உதவாத பிளாஸ்டிக் கழிவுகள் நாள்தோறும் 3.5 MT கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. மேற்கண்ட கழிவுகளை அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு தனியார் லாரி மூலம் அனுப்பப்படுகிறது. எனவே ஒரு புதிய டிப்பர் லாரி கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுமதி கோரி திட்ட பிரேரணை அனுப்புவற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி செலவினத்தை வருவாய் நிதி அல்லது SBM 2.0 நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2456/2023/எச்1) | **தீர்மான எண்.392<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| 25.10.2023 | **பொருள் – 12**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் -2 எண்ணிக்கை (வார்டு எண்.09 தீராம்பட்டி, வார்டு எண்.10 மஞ்சம்பட்டி) ஆகியவற்றில் உள்ள செப்டிக் டேங்க் சுத்தம் செய்தல் பணிக்கு 11.09.2023-ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு | **தீர்மான எண்.393<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>மூன்று விலைப்புள்ளிகள் 14.09.2023-ல் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை ரூபாய் (நடை ஒன்றுக்கு)</th></tr>
<tr><td>1</td><td>ரஞ்சிதா, செப்டிக் டேங்க் கிளீனிங், கோவில்பட்டிரோடு, மணப்பாறை</td><td>Rs.1250/-</td></tr>
<tr><td>2</td><td>உதயம் செப்டிக் டேங்க் கிளீனிங், கோவில்பட்டிரோடு, மணப்பாறை.</td><td>Rs.1150/-</td></tr>
<tr><td>3</td><td>தினேஷ் செப்டிக் டேங்க் கிளீனிங், மதுரைரோடு, மணப்பாறை</td><td>Rs.1100/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தினேஷ் செப்டிக் டேங்க் கிளீனிங், மதுரைரோடு, மணப்பாறை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு :-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.2313/2023/எச்1)</td><td></td></tr>
<tr><td>25.10.2023</td><td>பொருள் – 13<br>
இந்நகராட்சி சுகாதார பிரிவு, பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு அடிப்படை கடைநிலை பணியாளர்களுக்கு 2023-2024-ஆம் ஆண்டிற்கு சீருடை வழங்கவும் அதற்கான தையல் கூலி வழங்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு :-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்.394<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>25.10.2023</td><td>பொருள் – 14<br>
மணப்பாறை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF) மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு அத்தகைய நிலை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக திறந்தவெளியில் மலம், சிறுநீர் கழித்தலற்ற</td><td>தீர்மான எண்.395<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | நகராட்சியாக (ODF+) சான்று பெறுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் நகராட்சி பகுதியில் திறந்தவெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்று சுயஉறுதிமொழி (Self Declaration) வழங்கிடவும், இது குறித்தான ஆலோசனை மற்றும் கருத்துகள் பொதுமக்களிடமிருந்து கேட்டறிய இரண்டு தினசரி நாளிதழில் அறிவிப்பு பிரசுரம் செய்தமைக்கு அதற்கான கட்டணம் ரூ.6502/- வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| 25.10.2023 | **பொருள் – 15**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வின்படி, இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடு மற்றும் வணிக நிறுவனங்கிளிலிருந்து உருவாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் இதர பொருட்களை நகராட்சி வாரச்சந்தையில் உள்ள MCC மையத்திலிருந்து அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு தனியார் ஒப்பந்த நிறுவன வாகனம் மூலம் அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது. தனியார் நிறுவனத்தின் இப்பணியில் தொய்வு ஏற்படும் போது கழிவுகள் அதிகமாக சேர்ந்து திடக்கழிவு மேலாண்மை பணி பாதிப்பு ஏற்படுகிறது. அச்சமயத்தில் நகராட்சி மூலம் கழிவுகளை உடனடியாக அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு அனுப்புவதற்கு வாகன வாடகை செலவு உட்பட உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு;-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2387/2023/எச்1) | **தீர்மான எண்.396**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 25.10.2023 | **பொருள் – 16**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் அனைத்து வார்டுகளிலும் வீடு மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகள் நகராட்சி வாரச்சந்தையில் உள்ள MCC மையத்தில் இருந்து அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு தனியார் லாரியில் ஏற்றுவதற்றுகும், | **தீர்மான எண்.397**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

நகர்ப்பகுதியில் உள்ள புல், செடி, கொடிகள் மற்றும் முற்புதர்கள் அகற்றுவதற்கும், பருவமழை தடுப்பு நடவடிக்கையாக நகர்ப்பகுதியில் தேங்கும் மழைநீரை அப்புறப்படுத்துவதற்கும், வாய்க்கால்களில் உள்ள அடைப்புகளை நீக்கி அதிலுள்ள மண் முதலியற்றை JCB மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு 19.09.2023-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 26.09.2023-ல் வரப்பெற்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ஒருமணி நேரத்திற்கு வாடகை, டீசல் படி உட்பட) ரூபாயில் |
|---|---|---|
| 1 | பி.வடிவேல், ஸ்ரீ குமரன் எர்த் மூவர்ஸ், மதுரை ரோடு, மணப்பாறை | Rs.1300/- |
| 2 | எ.இளங்கோவன், ஜேடிபி எர்த் மூவர்ஸ் & லாரி சர்வீஸ், மணப்பாறை | Rs.1100/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள எ.இளங்கோவன், ஜேடிபி எர்த் மூவர்ஸ் & லாரி சர்வீஸ், மணப்பாறை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2343/2023/எச்1)

25.10.2023

**பொருள் – 17**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2023/SBM2.0, நாள்.11.05.2023-ன்படி, 08.04.2016 அன்று தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி மொத்த கழிவுகள் உற்பத்தியாளர்கள் (Bulk Waste generators) தாங்கள் சொந்த பொறுப்பில் தாங்கள் உற்பத்தி செய்த கழிவுகளை மேலாண்மை செய்ய

**தீர்மான எண்.398**
**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | அறிவுறுத்தப்பட்டுள்ளதால், மணப்பாறை நகராட்சி, நாள் ஒன்றுக்கு மொத்தம் 100 கிலோவுக்கு மேல் கழிவுகளை உற்பத்தி செய்தல் அல்லது அந்நிறுவனம் 5000 ச.மீ மேல் அமைந்திருத்தல் என்ற வரையறையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மொத்த கழிவுகள் உற்பத்தியாளர்களுக்கு, உற்பத்தியாகும் மூன்று வகையான கழிவுகளான மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் வீட்டில் உற்பத்தியாகும் அபாயகரமான கழிவுகளை பிரித்தல் முறையாக சேகரம் செய்தல் மற்றும் மக்கும் குப்பைகளை மேலாண்மை செய்தல் போன்றவற்றினை திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016 மற்றும் அதன் துணை விதிகளின் படி இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்கு மிகாமல் (10.08.2023-க்குள்) முழுமையாக மேலாண்மை செய்ய அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. (விரிவான விவரங்கள் மணப்பாறை நகராட்சி வலைதளத்தில் காணலாம்).<br><br>அனைத்து குடியிருப்போர் நல சங்கங்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் தங்கள் நிறுவனத்தில் 100 கிலோவிற்கு குறைவாகவே குப்பை உற்பத்தி செய்யப்படுகிறது. என்ற சுய உறுதிமொழி வழங்கப்படும் வரை மேற்காணும் அமைப்புகள், மொத்த குப்பை உற்பத்தியாளர்கள் என்று கணக்கிலேயே எடுத்துக்கொள்ளப்படும். அத்தகைய சுய உறுதிமொழியானது ஆய்வின் போது தவறு என கண்டறியப்பட்டால் துணை விதிகளின் படி அபராதம் விதிக்கப்படும். இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 20 நாட்களுக்குள், (28.06.2023-க்குள்) சுய உறுதி மொழி படிவங்களை, சம்மந்தப்பட்ட மொத்த குப்பை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மணப்பாறை நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். காலம் கடந்து வரப்பெற்ற சுய உறுதி மொழி படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்று கொள்ளப்படமாட்டாது.<br><br>திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 60 தினங்கள் கடந்து விதி மீறல் மேற்கொள்வோர்க்கு துணை விதிகளின் படி அபராதம் விதிக்கப்படும் வழங்கப்பட்ட உறுதிமொழியானது தவறு என பின்னர் கண்டறியப்படும் பட்சத்தில் மணப்பாறை நகராட்சி துணை விதிகளின் படி அபராதம் விதிக்கப்படும் என்ற அறிவிப்பு விளம்பரத்தினை நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-<br>1. அவசர அவசியம் கருதி நகமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1348/2023/எச்1) | |

| | | |
|---|---|---|
| 25.10.2023 | **பொருள் -18**<br>தமிழக அரசால் ஒவ்வொரு நகராட்சிக்கும் வழங்கப்பட்டு வரும் கூட்டு குடிநீர் திட்டத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (WS2) G.O. MS No.39 நாள் 17.04.2018 அரசாணையின் படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்படும் கூட்டு குடிநீர் திட்டத்தின் வாயிலாக நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீருக்கு இதுவரை 1000 லிட்டருக்கு ரூ.11.49/- வீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் இனிவரும் காலங்களில் அதாவது 01.08.2023 முதல் 30.04.2024 வரைக்கும் 1000 லிட்டருக்கு ரூ.16.00 கணக்கிட்டு செலுத்த வேண்டும் எனவும் அதே போல் ஒவ்வொரு வருடமும் 5% உயர்வு செய்யப்படும் என ஆணையிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>பதிவு செய்யலாம். | **தீர்மான எண்.399**<br>**பதிவு செய்யப்பட்டது.**<br>**ஆட்சேபனை தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது**<br>1. திருமதி. சொ. செல்லம்மாள், 1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>2. திருமதி. வி.அழகுசித்ரா, 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>3. திரு. அ எட்வின் அபிலாஷ், 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>4. திருமதி.சு.சர்மிளா, 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>5. திரு.அ.சவரிமுத்து, 10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>6. திரு.லெ.எத்திராஜ், 12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>7. திருமதி.த.வாணி, 13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>8. திருமதி.பா.சுதா, 18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>9. திருமதி.ரா.தீபா, 22-வது வார்டு நகர்மன்ற |

| | | |
|---|---|---|
| | | உறுப்பினர்,<br>10. திரு.பொ.கௌசிக், 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>**11.** திரு.ச.இராமன், 27-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 25.10.2023 | **பொருள் – 19**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:17-ல் ஜீவா தெரு, எடத்தெரு மற்றும் பழைய காலனி செல்லும் சாலை ஆகிய இடங்களில் உள்ள மினி பவர் பம்ப் மூலம் புதிதாக பைப் லைன் பதித்து, கூடுதலாக சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.70 இலட்சத்திற்கும், செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.400 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 25.10.2023 | **பொருள் – 20**<br>**திருமதி.இரா.முத்துலெட்சுமி 17 - வது வார்டு நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br><br>ஜீவா தெரு கிழக்கு பகுதியில் இயங்கிவரும் பூங்கா அதில் ஊஞ்சல், உடற்பயிற்சி கருவிகள் அனைத்தும் உடைந்து கிடைக்கின்றது அவைகளை எடுத்து பாதுகாக்கவும் பரமரித்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல். | **தீர்மான எண்.401 எதிர்வரும் திட்டநிதியில் மேற்கொள்ள அரசிற்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.** |
| 25.10.2023 | **பொருள் – 21**<br><br>**திரு.எ.பிரான்ஸிஸ் சேவியர் 9 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. தீராம்பட்டியில் உள்ள மினிபவர் சிண்டெக்ஸ்களில் இருந்து அங்கன்வாடி இருக்கும் வேரு ஒரு சின்டெக்ஸ்ற்கு பைப்லைன் போட்டு நீர் ஏற்றி தருமாறு | **தீர்மான எண்.402 எதிர்வரும் திட்டநிதியில் மேற்கொள்ள அரசிற்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | கேட்டுக்கொள்ளுதல்.<br>**2.** .விடத்திலாம்பட்டியில் செல்லும் வழியில் உள்ள போர் மினிசிண்டெக்ஸ் உள்ளது. அந்த சிண்டெக்ஸ்களில் இருந்து அங்கன்வாடியில் பைப்லைன் அமைத்து ஒரு பேஸ் மட்டம் அமைத்து சிண்டெக்ஸ் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல்.<br>**3.** செபஸ்தியார் கொவில் தெருவில் உள்ள பழைய தார்சாலையை பிச்சைமுத்து வீட்டில் இருந்து விட்த்தலாம்பட்டி செல்லும் ரவி வீடு வரை தார்சாலை குண்டும் குழியும் மாக உள்ளது அதனை புதிய தார்சாலையாக அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல். | |
| 25.10.2023 | **பொருள் – 22**<br>**திருமதி.எஸ்.விஜலெட்சுமி** 15 - **வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. ஆட்டோ காபி வீட்டின் அருகே உள்ள போர்வெல் நல்ல நிலையில் நீர் ஊற்று உள்ளது. அதனை பிளசிங் செய்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல்<br>2. மலையாண்டி தெருவில் உள்ள பொதுகழிப்பறை மிகவும் சேதம் அடைந்து இடியும் தருவாயில் உள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்ட வீட்டில் கழிப்பறை இல்லாத மக்கள் பயன்படுத்தி வருகின்றன. அவர்கள் பயன்படுத்தும் வகையில் கழிப்பறையை புதுபித்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல்.<br>**3.** சேதுரத்தினபுரம் மெயின் ரோட்டில் ( குமரப்பா ஜவுளிகடை ) எதிர் சந்தில் உள்ள சாக்கடை வெளியே இருக்கும் ஆக்கிரமப்புகளை அகற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த சாலையில் போக்குவரத்து அதிகம் உள்ள ரோடு திருமண மண்டபம் மற்றும் கல்வி நிலையம் உள்ளது. போக்குவரத்திற்கு மிகவும் நெரிசலாக ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளுதல் | **தீர்மான எண்.403 வ.எண்.1,2 எதிர்வரும் திட்டநிதியில் மேற்கொள்ள அரசிற்கு கருத்துரு அனுப்பவும், வ.எண்.3 உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.** |
| 25.10.2023 | **பொருள்** – 23<br>**திருமதி.த.தங்கமணி** 19 - **வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. கோவிந்தராஜபுரம் 2வது தெருவில் விநாயகா டீஸ்டால் சந்து சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல்.<br>2. காந்திநகர் பரதிதாசன் தெரு மூன்று தெருக்கள் சந்திக்கும் இட்த்தில் 10,000 லிட்டர் | **தீர்மான எண்.404 எதிர்வரும் திட்டநிதியில் மேற்கொள்ள அரசிற்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | கொள்ளவு கொண்ட தண்ணீர் தொட்டி அமைத்து தெரு குழாய்களுக்கு தண்ணிர் வழங்க தண்ணீர் தொட்டி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல்.<br><br>3. அமுல்ராஜ் நாயுடு காம்பவுண்ட் அருகில் ஹைமாஸ் அல்லது சோடியம் மின் விளக்கு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல். | |
| 25.10.2023 | **பொருள் – 24**<br>**திருமதி.த.மனோன்மணி** 20 - **வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br><br>1. கரிக்கான் குளம் ரேசன் கடை பின்புறம் குளத்திலிருந்து வரும் உபரி நீருக்கு சிமெண்ட் வாய்கால் அமைத்து மயில் ஆர்ச் அருகில் உள்ள பாலத்தில் இணைத்து கொடுக்க வேண்டும்.<br><br>**2.** சின்ன நாட்டாண்மை மோகன் வீட்டுக்கு அருகில் 4 தெருக்கள் சந்திக்கும் இடத்தில் அல்மாஸ் அல்லது சோடியம் மின்விளக்கு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல். | **தீர்மான எண்.405 எதிர்வரும் திட்டநிதியில் மேற்கொள்ள அரசிற்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.** |
| 25.10.2023 | **பொருள் – 25**<br><br>**திரு**.**ஆர்**.**தீபா** 22 - **வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. முத்தன் தெரு சின்ன கடை வீதி சாலை மிகவும் சேதம் அடைந்துள்ளது. அந்த பகுதியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர் மாணவிகள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்துவதால் அந்த பகுதியில்பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் பாதையை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br><br>**2.** அப்பாவு தெரு சிமெண்ட் சாலை அமைத்து 30 வருடங்களுக்கு மேலாகிறது. தற்போது அந்த சாலை மிகவும் சேதம் அடைந்துள்ளது அதனை புதுபித்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல். | **தீர்மான எண்.406 எதிர்வரும் திட்டநிதியில் மேற்கொள்ள அரசிற்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 25.10.2023 | **பொருள்** – 26<br>**திரு.பொ.கௌசிக்** 26 - **வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. அப்பு அய்யர் குளத்தில் இருந்து வெளியேறும் உபரிநீர் குடியிருப்பு பகுதிகளுக்கு சென்று பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் இருக்க ராஜீவ் நகர் முதல் பிரதான சாலையில் நகராட்சியில் உடைக்கப்பட்ட மழைநீர் கால்வாயை அகலப்படுத்தியும் உயர்த்தியும் அவசரம் அவசியம் கருதி விரைந்து சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்ளுதல். | **தீர்மான எண்.407**<br>**எதிர்வரும் திட்டநிதியில் மேற்கொள்ள அரசிற்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.** |

**(ஒம்) கீதா.ஆ.மைக்கேல்ராஜ்**
**நகர்மன்றத் தலைவர்**
**மணப்பாறை நகர்மன்றம்**